**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 208/2024**

**Deposition of P.W. 1**

Name : திரு. சுடலைமணி

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**08.04.2026**

**A1, A2 Present.** A3 absent. Petition filed and allowed.

முதல் விசாரணை–

நான் தமிழ்நாடு காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது கவரபேட்டையில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் நேசமணிநகர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது கூடுதல் பொறுப்பாக ஆப்ரேஷன் எக்ஸ்ரே என்ற பிரிவில் பணிபுரிந்து வந்தேன். 26.04.2012ம் தேதி காலை 09.00 மணிக்கு நான், உதவி ஆய்வாளர் திரு. செந்தில் குமார், உதவி ஆய்வாளர் திரு. பாலசுந்தரம், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பாலன், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சசிதரன் தம்பி, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. கிறிஸ்துதாஸ், தலைமைக்காவலர்கள் திரு.சசிகுமார், தனபால், முதல்நிலை காவலர் திரு. ஐயப்பன் என்பவர்களுடன் காலை 09.00 மணிக்க குலசேகரம் காவல்நிலைய எல்கைக்கு உட்பட்ட குரங்காடி என்ற பகுதியில் எங்கள் பணியை ஆரம்பித்தோம், அப்போது நெல்சன் பாஸ்கர், வாழைவிளை முக்கு மணலிக்கரை, சாமுவேல் வெற்றிலை விற்பனையாளர் மாளன் நகர் வேர்கிளம்பி என்பவர்களுக்கு சொந்தமான பொன்மனை வருவாய் கிராம

புல எண். 514 என்ற இடத்தில் லட்சகணக்கான மதிப்புள்ள கனி வளங்களை உரிமையாளர்களின் ஆதாயத்திற்காக திருடி கொண்டிருந்தனர். அவர்களை நாங்கள் பிடிக்க முயன்ற போது ஓடி விட்டார்கள். ஓடியவர்கள் ஜாண், ரவி, செல்வன், ஆகியவர்கள் என்பது தெரிய வந்தது. அந்த இடத்தில் தேடி பார்த்ததில் சுமார் 20 அடி நீளம் கொண்ட ஷேப்டிக் பியூஸ், அமோனியம் நைட்ரேட் 30 கிலோ, டெட்டனேட்டர்-13, TN 75 V 4313 என்ற டிராக்டர், TN 36 V 7468 என்ற டிராக்டர், TN 75 D 5968 என்ற டிப்பர் லாறி (கல்லுடன் கூடியது) ஆகியவற்றை சாட்சிகள் செந்தில்குமார், பாலசுந்தரம் முன்னிலையில் 14,00 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன். பின்னர் 17.00 மணிக்கு வழக்கு சொத்துகளுடன் குலசேகரம் காவல்நிலையத்தில் ஆஜராகி புகார்மனு கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1. அத்தாட்சி அ.சா.ஆ.2 காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.,

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் சம்பவத்தின் போது நேசமணி நகர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றினேன். சம்பவ இடம் குலசேகரம் காவல்நிலைய எல்கைக்கு உட்பட்டது. குலசேகரம் காவல்நிலையத்திற்கு தகவல் கொடுக்கவில்லை. சம்பவ சமயம் எக்ஸ்ரே தனிபிரிவில் நியமிக்கப்பட்டிருந்தேன் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யலாம். எதிரிகள் பாறைகளை உடைத்தது குறித்து வெளியே சொல்லக்கூடாது என்பது காவல்நிலைய ஆணை ஆகும். வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் ரோந்து செல்லவில்லை, சிறப்பு பணியாக சென்றோம். என்னுடன் வந்தவர்கள் அனைவரும் நேசமணிநகர் காவல்நிலையத்தில் உள்ளவர்கள் இல்லை தனிபிரிவு பணிக்காக மாவட்டம் முழுவதும் உள்ள காவல்நிலையங்களிலிருந்து நியமிக்கப்பட்டவர்கள் ஆவார்கள். எங்கள் எக்ஸ்ரே பிரிவிற்கு தனி அலுவலகங்கள் கிடையாது. எதிரிகளுக்கு சொந்தமான நிலம் என்பதை காட்ட நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பட்டா எண்ணை கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து தெரிந்து கொண்டேன். கிராம நிர்வாக அதிகாரி சாட்சியாக உள்ளாரா என்று எனக்குத் தெரியாது. சொத்தின் எல்கைகளை நான்



கேட்கவில்லை புல எண் மட்டும் கேட்டேன். நெல்சன் பாஸ்டர், சாமுவேல் ஆகியவர்கள் மீது நான் புகார் கொடுத்துள்ளேன். நான் சொன்னதுபோல் சொத்துஇல்லை என்றும், எதிரிகள் பாறையை உடைக்கவில்லை என்றும்,

சம்பவ இடத்திலிருந்து வெடிபொருளை நான் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அரசு அங்கீரம் பற்றிய குவாரிகளை எனக்குத் தெரியாது. கனிமவள அதிகாரிக்கு நான் தகவல் கொடுக்கவில்லை. எதிரிகளை சுமார் 250 மீட்டர் தொலைவில் வைத்து பார்த்தேன். எதிரிகளை பிடிக்க முயற்சி செய்தோம், முடியவில்லை. எதிரிகள் சம்பவ இடத்திலிருந்து எவ்வளவு தொலைவில் வசித்து வருகிறார்கள் என்று எனக்குத் தெரியாது. அத்தாட்சி தயார் செய்ய அரை மணி நேரம் ஆனது. அத்தாட்சியில் செந்தில் குமார் மற்றும் பாலசுந்தரம் ஆகியவர்கள் கையொப்பம் செய்தார்கள். வாகன உரிமையாளர்கள் பற்றி நான் விசாரிக்கவில்லை. வாகனங்களை காவலர்கள் தான் குலசேகரம் காவல்நிலையத்தில் ஓட்டி வந்தார்கள். புகாரை நான் தான் எழுதினேன். அதில் வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை. கைப்பற்றப்பட்ட பொருட்களை நிலைய அதிகாரிகளிடம் ஒப்படைத்தேன். கைப்பற்றப்பட்ட பொருட்களை பிளாஸ்டிக் பைகளில் கொண்டு கொடுத்தோம், அமோனியம் நைட்ரேட் மூடையாக இருந்தது. எதிரிகளுக்கு எதிராக பொய்யாக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. புள்ளி விபரத்திற்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 208/2024**

**Deposition of P.W. 2**

Name : திரு. செந்தில்குமார்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**08.04.2026**

**A1, A2 Present.** A3 absent. Petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பாதுகாப்பு பிரிவு உதவி ஆணையராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2012ம் ஆண்டு மார்த்தாண்டம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது நான் ஆப்ரேஷன் எக்ஸ்ரே தனி பிரிவு அலுவலுக்கு அலுவலராக நியமனம் செய்யப்பட்டேன். கடந்த 26.04.2012ம் தேதி காலை 09.00 மணிக்கு நானும், காவல் ஆய்வாளர் திரு. சுடலைமணி அவர்கள் தலைமையில் வெடிபொருட்கள் கண்காணிப்பு பணியில் இருந்த போது குலசேகரம் காவல்நிலையத்திற்குட்பட்ட குரங்காடி என்ற இடத்தில் மணலிக்கரையை சேர்ந்த நெல்சன் பாஸ்டர், வேர்கிளம்பியை சேர்ந்த சாமுவேல் என்பவர்களுக்கு சொந்தமான பொன்மனை கிராம புல எண்.514ல் மணலிக்கரையை சேர்ந்த ஜாண், ரவி, செல்வன், ஆகியவர்கள் மேற்படி இடத்தில் கனிமவளங்களை திருடி கொண்டிருந்த போது எங்களை பார்த்ததும் ஓடி விட்டார்கள். அங்கு சென்று சோதனை செய்த போது சுமார் 20 அடி நீளமுள்ள ஷேப்டி பியூஸ் வெடி திரி–2, சுமார் 30

கிலோ எடையுள்ள அமோனியம் நைட்ரேட், எலெக்ட்ரிக் டெட்டனேட்டர்–13, TN 25 V 4313 எண் கொண்ட டிராக்டர், TN 36 B 7468 என்ற எண் கொண்ட டிராக்டர், TN 75 D 5968 என்ற 407 (கல்லுடன்) ஆகியவற்றை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்ற அதில் நானும், சார்பு ஆய்வாளர் திரு. பாலசுந்தரம் என்பவரும் கையொப்பம் செய்தோம். கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் நிலையம் சென்று காவல் ஆய்வாளர் நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தார். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எக்ஸ்ரே பிரிவிற்கு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் என்னை நியமித்தார். சம்பவ இடத்திற்கு போலீஸ் வாகனத்திற்கு போனோம். சம்பவ இடத்தில் வேறு கல்குவாரிகள் இல்லை. பக்கத்தில் யாரும் இல்லாததால் விசாரிக்கவில்லை. போலீஸ் வாகனத்தை பார்த்தும் எதிகள் ஓடி விட்டார்கள். விரட்டி பிடிக்க முயற்சி செய்தோம் ஆனால் ஓடி விட்டார்கள். எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லை என்றும், புள்ளி விபர கணக்கிற்காக எதிரிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளின் பெயரை காவல் ஆய்வாளர் விசாரித்து சொன்னார். எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.